2003 மே 8]

வ.எண்	மீனவ கிராமத்தின் பெயர்	போடப்பட்டுள்ள இணைப்புச் சாலையின் நீளம் (கி.மீ.ல்)	செலவினம் (ரூ. இலட்சத்தில்)
1.	அறந்தாங்கி தொகுதி கட்டுமாவடி	1.50	2.90
2.	அம்மாப்பட்டினம்	1.00	2.00
3.	அய்யம்பட்டினம்	0.75	1.50
4.	ஆர்.புதுப்பட்டினம்	1.20	2.40
5.	கோபாலப்பட்டினம்	0.75	1.50
	மொத்தம்	5.20	10.30

அறந்தாங்கி தொகுதியிலுள்ள மீனவ கிராமங்களுக்கு சாலை வசதி செய்து கிழக்குக் கடற்கரை சாலையுடன் இணைக்கும் திட்டம் ஏதும் தற்போது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அரசு ஊழியர்கள், மருத்துவ மாணவர்கள் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள் தாங்கள் போராடுவதாக அறிவித்திருக்கிறார்கள். மறியல் போராட்டம் இன்று நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். போராடிப் பெற்ற உரிமைகளைப் பறிக்கும் ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டம் இன்றையதினம் வெற்றிபெறவில்லை என்று சொன்னால் தொடர்ந்து தொடர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

போராட்டம் நடத்த இருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதேபோல பல்வேறு தரப்பினர்கள்—இன்றையதினம் மாணவர்கள், மருத்துவ மாணவர்கள் போராட்டக் களத்திலே இருக்கிறார்கள், போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக டாக்டர்களும் போராட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பல்வேறு பிரச்சினைகள் இன்றையதினம் புதிதாக முளைத்துக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக நீலகிரியைப் பொறுத்தவரையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஏதாவது ஒரு பிரச்சினையை நீங்கள் கொண்டு வாருங்கள். நாடு முழுவதும் இருக்கக்கூடிய பிரச்சினைகள் பூராவையும் பேசினால் சரியாக வராது. ஏதாவது ஒரு பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இல்லை. ஒரே செகன்ட், முக்கியமான பிரச்சினை. வேறு ஒன்றும் இல்லை. நீலகிரியைப் பொறுத்தவரையில் எப்போதுமே எந்தப் பணியாக இருந்தாலும் மதிப்பீட்டிலே 25 சதவீதத்தை அரசு கூட்டி அளிக்கும், அதிகமாகக் கொடுக்கும். அப்போதுதான் அங்கே பணி நடைபெறும். காரணம், எல்லா பொருட்களும் கீழேயிருந்து மேலே செல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதற்கெல்லாம் அரசுத் தரப்பிலே பதில் இருக்காது. நீங்கள் ஏதாவது ஒரு பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவ்வளவுதான்.

முற்பகல் 11-05

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: சரி ஏற்கெனவே அனுபவித்துக் கொண்டிருக்கிற உரிமைகளை அரசாங்கம் பறிக்க நினைப்பதை அரசு ஊழியர்களும் ஆசியர்களும் எதிர்க்கிறார்கள். எனவே, அதைப் பறிக்க நினைப்பது சரியாக இருக்காது. அந்த ஊழியர்களை, அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை அரசு அழைத்துப் பேச வேண்டும். இதை கௌரவப் பிரச்சினையாகக் கருதக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கௌரவப் பிரச்சினையல்ல. ஏனென்றால், இது அவர்களை மட்டும் பாதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அழைத்துப் பேச வேண்டுமென்று சொல்லி அதோடு முடியுங்கள். (குறுக்கீடு)

2003 மே 8]

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: பொதுமக்களையும் பாதிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சரி.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களை மட்டும் பாதிக்கவில்லை. மருத்துவக் கல்லூரி மாணவர்களை மட்டும் பாதிக்கவில்லை. பொதுமக்களையும் பாதிக்கிறது. எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். சுமூகமான தீர்வு காண வேண்டும். பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும். ESMA சட்டம் பாயும் என்று அச்சுறுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. மணி என்ன சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களுடைய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பிரச்சினைதானே?

திரு. ஜி.கே. மணி: கோரிக்கைகளை முன்வைத்து (குறுக்கீடு) இல்லை. சொல்லிவிடுகிறேன் தலைவா! ஒரே நிமிடத்திலே சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவருடைய கோரிக்கை குறித்து திரு. ஜி.கே. மணி அவர்களும் சொல்கிறார்கள். அவ்வளவுதான்.

திரு. ஜி.கே. மணி: இல்லை, இல்லை, சொல்லிவிடுகிறேன். நான் ஒரே நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாறி, மாறி இதே கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஜி.கே. மணி: இல்லை, சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கவனத்திற்குத்தான் கொண்டு வந்திருக்கிறார்.

திரு. ஜி.கே. மணி: இது முக்கியமான பிரச்சினை. அழைத்துப் பேச வேண்டும் என்பது ஒன்று. அதே நேரத்திலே அவர்களை அச்சுறுத்தவும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூடாது. இன்றுகூட பார்த்தீர்களேயானால், அதிகாரிகள் மூலமாக, துறையினுடைய அதிகாரிகளின் மூலமாக தலைமைச் செயலாளர், மற்ற துறைச் செயலாளர்கள் மூலமாக அச்சுறுத்தல் எல்லாம் இருக்கின்றன. கோரிக்கையைக் கேட்கின்ற நேரத்திலே இப்படியெல்லாம் அச்சுறுத்தல் கூடாது என்பது ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். முடியுங்கள். திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்). இல்லை எஸ்.ஆர்.பி. கருத்தை நீங்களும் சொல்கிறீர்கள் அவ்வளவுதான். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுடைய ... (குறுக்கீடு).*

திரு. ஜி.கே. மணி: *அவர்களுடைய போராட்டம் நியாயமான போராட்டம். அதேபோல மாணவர்கள் போராடுவது தனியார் மருத்துவக் கல்லூரிகள் ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை திரு. மணி, இதைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்வதாக இல்லை. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுடைய...*

திரு. ஜி.கே. மணி: *அவர்களை அச்சுறுத்துகிற வகையிலே ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர, யாரையும் அச்சுறுத்தவில்லை.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மறியல் போராட்டம் மக்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய அளவிலே உள்ளது. (குறுக்கீடு)*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஹேமச்சந்திரன், சொல்லுங்கள்.*

2003 மே 8]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாநிலத்திலே மக்களின் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசு அந்த ஊழியர்களை அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு ஏற்படுத்தி, தமிழகத்திலே மாமூல், சகஜ வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான்.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் (குறுக்கீடு). சொல்லியாகிவிட்டது அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.